| நம்மையும் நாட்டுமக்களையும் காப்போம் | தொற்றிலிருந்துதமிழகத்தைமீட்போம் |
|---|---|

செ.வெ.எண்:37 நாள்:28.06.2021

***மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் போர்கால நடவடிக்கைகளின்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்று பாதிப்புகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.***
***மாவட்ட ஆட்சித்தலைவர்***
***டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப.,அவர்கள்***
***செய்தியாளர் சந்திப்பில் தகவல்.***

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (28.06.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் கொரோனா நோய்த்தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

கொரோனா வைரஸ் நோய்த்தொற்று பரவலைத் தடுப்பதற்காக, இந்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் 25-3-2020 முதல் தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், ஊரடங்கு சில தளர்வுகளுடன் நடைமுறையில் இருந்து வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு, நோய்த்தொற்று பரவல் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கொரோனா நோய்த்தொற்று தடுக்கும் பொருட்டு, கடந்த 24.05.2021 முதல் தளர்வுகளற்ற / சில தளர்வுகளுடனும் முழு ஊரடங்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 கொரோனா நோய்த்தொற்று பரிசோதனை ஆய்வகங்கள் மூலம், 27.06.2021 வரை பரிசோதனை செய்யப்பட்ட 4,16,830 நபர்களில் 3,77,273 நபர்களுக்கு கொரோனா நோய்த்தொற்று இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. நாளதுவரை 39,557 நபர்கள் கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு 38,180 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர். 1,080 நபர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

**தடுப்பூசிகள் தொடர்பான விபரம்:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கொரோனா நோய்த்தொற்று தடுப்பூசிகள் சுகாதாரப் பணியாளர் 12,068 நபர்களுக்கு ஒரு டோஸ் மற்றும் 5,725 நபர்களுக்கு இரண்டு டோஸ்களும், முன்களப்பணியாளர் 16,623 நபர்களுக்கு ஒரு டோஸ் மற்றும் 5,541 நபர்களுக்கு இரண்டு டோஸ்களும், 18 முதல் 44 வயதிற்குட்பட்ட 64,733 நபர்களுக்கு ஒரு டோஸ் மற்றும் 4 நபர்களுக்கு இரண்டு டோஸ்களும், 45 வயதிற்கு மேற்பட்ட 1,34,341 நபர்களுக்கு ஒரு டோஸ் மற்றும் 37,100 நபர்களுக்கு இரண்டு டோஸ்களும்,

தொழில்துறை மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் 70,473 நபர்களுக்கு ஒரு டோஸ் மற்றும் 65 நபர்களுக்கு இரண்டு டோஸ்களும், மாற்றுத்திறனாளிகள் 1,053 நபர்களுக்கு ஒரு டோஸ், திருங்கைகள் 46 நபர்களுக்கு ஒரு டோஸ் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2,99,291 நபர்களுக்கு ஒரு டோஸ் மற்றும் 48,435 நபர்களுக்கு இரண்டு டோஸ்களும் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் மூலம் தடுப்பூசிகள் பெறப்பட்டு பொதுமக்களுக்கு 100 சதவிகித இலக்கின் அடிப்படையில் கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

**படுக்கை வசதிகள் தொடர்பான விபரம்:**

கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைகளில் மொத்தம் உள்ள 1,230 படுக்கைகளில் 757 படுக்கைகளும், தனியார் மருத்துவமனைகளில் மொத்தம் உள்ள 1,777 படுக்கைகளில் 922 படுக்கைகள் கொரோனா நோய்த்தொற்று பாதிக்கப்பட்ட நபர்களுக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் உள்ள 1,679 படுக்கைகளில் பிராணவாயு இல்லாமல் 119 படுக்கைகளும், பிராணவாயு வசதியுடன் 1,453 படுக்கைகளும், அவசர சிகிச்சை பிரிவிற்கு 107 படுக்கைகளும் வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுதுள்ள 1,679 படுக்கைகளில் கொரோனா நோய்த்தொற்று உறுதிசெய்யப்பட்ட 195 நபர்களும், கொரோனா நோய்த்தொற்று அறிகுறிகளுடன் 185 நபர்கள் என மொத்தம் 380 நபர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**பிராணவாயு இருப்பு நிலை குறித்த விபரம்:**

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் 810 டி வகை உருளைகளும், 20 கிலோ லிட்டர் திரவ நிலை பிராணவாயுவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், கொரோனா நோய்த்தொற்று சிகிச்சை அளிக்க தேவையான அளவு பிராணவாயு இருப்பில் உள்ளது.

**சிறப்பு காய்ச்சல் முகாம் விபரம்:**

நாளதுவரை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 13,638 சிறப்பு காய்ச்சல் முகாம்கள் மூலம் 12,54,030 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் இதுபோன்ற சிறப்பு காய்ச்சல் முகாம்களில் பங்குபெற்று பரிசோதனை செய்து தங்களது பாதுகாப்பினை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம் தொடர்பான விபரம்:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 27 தனியார் மருத்துவமனைகள் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொரோனா நோய்த்தொற்று சிகிச்சை பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில், 50 சதவிகித படுக்கைகள் கொரோனா நோய்த்தொற்று பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாளதுவரை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 461 நபர்கள் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் பயன்பெற்று உள்ளனர். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற இணை இயக்குநர் (நலப்பணிகள்) அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

**கரும்பூஞ்சை நோய்த்தொற்று தொடர்பான விபரம்:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நாளதுவரை, 67 நபர்களுக்கு தனியார் மருத்துவமனைகள் மூலம் கரும்பூஞ்சை நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில், 42 நபர்கள் கொரோனா நோய்த்தொற்றினை தொடர்ந்தும், 25 நபர்கள் கொரோனா நோய்த்தொற்று அல்லாத நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், 4 நபர்கள் சிகிச்சை முடிந்து வீடு திரும்பி உள்ளனர்.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கொரோனா நோய்த்தொற்று தொடர்பாக முதல் மற்றும் இரண்டாம் அலைகளின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் போர்கால நடவடிக்கைகளின்படி, பொதுமக்களின் முழு ஒத்துழைப்புடனும், அனைத்து துறை சார்ந்த அலுவலர்களின் முயற்சியாலும், கொரோனா நோய்த்தொற்று தற்பொழுது குறைந்து வருகிறது.

தொடர்ந்து, உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுரையின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கொரோனா நோய்த்தொற்று மூன்றாம் அலை தொடங்கும் பட்சத்தில் அதற்கான அனைத்து பாதுகாப்பு வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக, குழந்தைகளுக்கென 100 படுக்கைகள் தயார் நிலையில் உள்ளது. எனவே, பொதுமக்கள் கொரோனா நோய்த்தொற்று மற்றும் கரும்பூஞ்சை நோய் குறித்து அச்சம் கொள்ள வேண்டாம்.

எனவே, பொதுமக்கள் ஊரடங்கில் தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளது என காரணமின்றி வீட்டை விட்டு வெளியே வருவதை தவிர்க்க வேண்டும். அரசின் பாதுகாப்பு வழிமுறைகளான சமூக இடைவெளியை கடைபிடித்தல், முககவசம் அணிதல், கிருமி நாசினி/ சோப்பு கொண்டு அடிக்கடி கைகளை சுத்தம் செய்தல் போன்றவைகளை கடைபிடிக்க வேண்டும். வீட்டில் உள்ள குழந்தைகளை தேவையின்றி வெளியே அழைத்து செல்வதை தவிர்க்க வேண்டும். மேலும், கொரோனா நோய்த்தொற்று மற்றும் கரும்பூஞ்சை நோய் குறித்து உறுதிசெய்யப்படாத மற்றும் தவறான தகவல்களை கைபேசி/சமூக வளைதளங்கள் மூலம் தவறான கருத்துக்களை பரப்புவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.அசோகன், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.பரமசிவன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வி.கோவிந்தன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பி.முருகன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**

| | |
|---|---|
| முககவசம் அணிவீர் | தனி மனித இடைவெளி கடைப்பிடிப்போம் |